**செய்தி வெளியீடு எண்.549 நாள். 9.7.2008**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இன்று (9.7.2008) இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் டாக்டர் ஒய்.வி.ரெட்டி அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலர், நிதிச் செயலாளர் மற்றும் ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர் திரு.ஜோசப் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழக அரசின் நிதி மேலாண்மை குறித்தும், ரிசர்வ் வங்கிக்கு தமிழக அரசு நல்கி வரும் ஒத்துழைப்பு குறித்தும் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார். மேலும், நாட்டின் பொருளாதார நிலை மற்றும் அண்மை நிகழ்வுகள் குறித்தும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ரிசர்வ் வங்கியின் ஆளுநர் அவர்கள் இந்த சந்திப்பின்போது விளக்கினார். விலைவாசி உயர்வால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகியன குறித்து எடுத்துரைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மேலும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். இது குறித்த அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என ரிசர்வ் வங்கியின் ஆளுநர் அவர்கள் உறுதியளித்தார்.

* *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.